# நேர்மையாக வாக்களிக்க வாக்காளரின் உறுதிமொழி

ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையுடைய இந்தியக் குடிமகனாகிய நான், என் நாட்டின் ஜனநாயகத்தின் மரபுகளையும், சுதந்திரமான, நியாயமான மற்றும் அமைதியான தேர்தல் மாண்பையும் நிலைநிறுத்துவேன் என்றும், மேலும் இத்தேர்தலில் அச்சமின்றியும், பணமோ, பொருட்களோ பெறாமலும், எந்தவொரு தூண்டுதலுக்கும் உட்படாமலும் நேர்மையாக சிந்தித்து வாக்களிப்பேன் என்றும் உளமார உறுதி ஏற்கிறேன். தேர்தல் விதிமீறல்கள் குறித்த எந்த செயல் பற்றியும் நான் அறியவந்தால், அதனை தேர்தல் அதிகாரிகளிடம் தெரிவித்து உரிய நடைமுறைக்கு உட்படுத்துவேன் என்றும் உறுதி ஏற்கிறேன்.